## செய்தி வெளியீடு எண்: 385 நாள்: 04.07.2012

# பத்திரிக்கை செய்தி

### தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கான தலைவர் மற்றும் ஆறு உறுப்பினர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது

குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005, பிரிவு 17(1) ன்படி மாநிலத்தில் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு தலைவர் மற்றும் ஆறு உறுப்பினர்களை நியமனம் செய்ய வேண்டி சமூகப்பாதுகாப்புத் துறையால் விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்ப படிவங்கள் மற்றும் தேவையான தகுதி விவரங்கள் www.tn.gov.in (Social Welfare & Nutritious Meal Programme Department) என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

தகுதிவாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிகளுக்கு (இரு பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் நபர் இரு தனி விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்) அதற்கான அமைந்த படிவத்தில் புகைப்படத்துடன் (pass-port size) 31.07.2012, 5.30 மணிக்குள் கீழ் கண்ட முகவரியில் கிடைக்கப்பெறுமாறு விண்ணப்பிக்கலாம்.

**முதன்மை செயலர் / சிறப்பு ஆணையர்,**
**சமூகப்பாதுகாப்புத் துறை,**
**எண்.300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,**
**கெல்லீஸ், சென்னை.600 010.**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும். இது குறித்து அரசின் முடிவே இறுதியானது.

**முதன்மை செயலர் / சிறப்பு ஆணையர்**
**சமூகப்பாதுகாப்புத் துறை**

**வெளியீடு: –**

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.